# பொள்ளாச்சி நகராட்சி
## அவசரக் கூட்டம்

**28.11.2024 ம் தேதி வியாழக்கிழமை மாலை 4.00 மணிக்கு பொள்ளாச்சி நகராட்சி நகர மன்ற கூட்டரங்கில் நடைபெற்ற அவசரக் கூட்டம் நடவடிக்கைகள்**

| வ. எண் | பொருள் விபரம் | தீர்மானம் |
|---|---|---|
| 1 | நகராட்சி எல்லைக்குட்பட்ட சி.டி.சி மேடு பகுதியில் புதிய புறநகர் பேருந்து நிலையம் அமைத்தல் பணிக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது. பணியிலுள்ள மொத்த இனங்களில் 85% சதவீத பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகிறது. கட்டப்படும் பேருந்து நிலையத்தில் பேருந்துகள் நிற்பதற்கு ஏதுவாக பஸ் நிறுத்த Bay–கள் அமைக்க வேண்டி உள்ளது. அவ்வாறு Busbayகள் அமைக்கப்படும் வடக்கு பகுதியில் ஓடுதளம் மிகவும் தாழ்வாக உள்ளதால் ஓடுதளம் உயர்ந்த வேண்டியது அவசியம் ஆகிறது. எனவே தாழ்வாக உள்ள ஓடுதளத்தை உயர்த்த கான்கிரீட் தடுப்பு சுவர் அமைத்தல் மற்றும் Busbay அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.57.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலககுறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. தயார் செய்யப்பட்ட உத்தேச செலிவினத் தொகையை பொது நிதியில் மேற்கொள்ள நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதிப் பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்:**4359/2022/இ1** | **தீர்மானம் எண்.1269 அனுமதிக்கப்பட்டது** |
| 2 | பொள்ளாச்சி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.09, ரத்தினம் நகர் பூங்காவிற்கு தண்ணீர் இல்லாத காரணத்தினால், பூங்காவில் உள்ள செடி, கொடிகள் காயும் நிலை உள்ளதால், ஆழ்துளை கிணறு அமைத்து பூங்காவிற்கு தண்ணீர் வழங்குவதற்கு, புதிய ஆழ்துளை கிணறு, பம்ப் செட் மற்றும் பகிர்மான குழாய் அமைக்கும் பணி மேற்கொள்ள ரூ.4.60 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை குடிநீர் வழங்கல் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்: **5536/2024/இ1** | **தீர்மானம் எண்.1270 அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| 3 | பொள்ளாச்சி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.30 கலைவாணர் வீதியில் உள்ள பொது கிணறு தூர்வாரப்பட்டு, சுத்தமான தண்ணீரானது Submergible Pump and motor மூலம், சின்டெக்ஸ் அமைத்து, பொதுமக்களுக்கு குடிநீர் அல்லாத பிற பயன்பாட்டிற்கு தண்ணீர் வழங்க வேண்டி நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்துள்ளார். எனவே மேற்கண்ட பணியை மேற்கொள்ள ரூ.3.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை குடிநீர் வழங்கல் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்: **6213/2024/இ1** | **தீர்மானம் எண்.1271 அனுமதிக்கப்பட்டது** |
| 4 | பொள்ளாச்சி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.33, சின்னசாமி லே அவுட் மற்றும் வாசவி நகர் பகுதிக்கு பொதுமக்களின் குடிநீர் அல்லாத பிற தேவைகளை பூர்த்தி செய்வதற்கு சி.டி.சி காலனி கிணற்றிலிருந்து பகிர்மான குழாய் அமைத்து பொதுமக்களுக்கு தண்ணீர் வழங்குவதற்கு ரூ.3.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை குடிநீர் வழங்கல் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்: **6214/2024/இ1** | **தீர்மானம் எண்.1272 அனுமதிக்கப்பட்டது** |
| 5 | பொள்ளாச்சி நகராட்சி மேற்கு பகுதிகளில் உள்ள 17 வார்டுகளில் **(வார்டு எண். 1, 2, 3, 4, 12, 13, 14, 15, 16, 17, 18, 19, 27, 28, 29, 30 மற்றும் 33)** குடிநீர் விநியோகம் செய்யப்படும் குடிநீர் குழாய்களில் ஏற்படும் குடிநீர் கசிவுகளையும், குடிநீர் விநியோகம் செய்ய பயன்படும் மதகுகளில் (Valve) ஏற்படும் கசிவுகளையும், பொதுக் குழாய்களில் ஏற்படும் கசிவுகளையும், குடிநீர் குழாய்களில் ஏற்படும் அடைப்புகள் மற்றும் கிணற்று நீர் குழாய்களில் ஏற்படும் கசிவுகளையும், உடனுக்குடன் சரிசெய்ய வேண்டியுள்ளது. மேலும் அவ்வப்பொழுது குடிநீர் குழாய் உடைப்பு சரி செய்தல் மற்றும் அடைப்புகள் ஆகியவற்றை சரிசெய்து, பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்ய வேண்டியுள்ளதாலும், குடிநீர் அத்தியாவசியப் பணியான இப்பணியை மேற்கொள்வதற்கு ரூ.9.90 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகையை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை குடிநீர் வழங்கல் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். 6215/2024/இ1** | **தீர்மானம் எண்.1273 அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr><td>6</td><td>பொள்ளாச்சி நகராட்சி கிழக்கு பகுதிகளில் உள்ள 19 வார்டுகளில் (வார்டு எண்.5, 6, 7, 8, 9, 10, 11, 20, 21, 22, 23, 24, 25, 26, 31, 32, 34, 35 மற்றும் 36) குடிநீர் விநியோகம் செய்யப்படும் குடிநீர் குழாய்களில் ஏற்படும் குடிநீர் கசிவுகளையும், குடிநீர் விநியோகம் செய்ய பயன்படும் மதகுகளில் (Valve) ஏற்படும் கசிவுகளையும், பொதுக் குழாய்களில் ஏற்படும் கசிவுகளையும், குடிநீர் குழாய்களில் ஏற்படும் அடைப்புகள் மற்றும் கிணற்று நீர் குழாய்களில் ஏற்படும் கசிவுகளையும் உடனுக்குடன் சரிசெய்ய வேண்டியுள்ளது. மேலும் அவ்வப்பொழுது குடிநீர் குழாய் உடைப்பு சரி செய்தல் மற்றும் அடைப்புகள் ஆகியவற்றை சரிசெய்து, பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்ய வேண்டியுள்ளதாலும், குடிநீர் அத்தியாவசியப் பணியான இப்பணியை மேற்கொள்வதற்கு ரூ.9.90 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகையை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு :</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை குடிநீர் வழங்கல் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.6216/2024/இ1</td><td>தீர்மானம் எண்.1274<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>7</td><td>பொள்ளாச்சி நகர பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் தடையின்றி விநியோகம் செய்ய ஏதுவாக நகராட்சி பகுதிகளில் உள்ள 9 உயர்மட்ட நீர் தேக்க தொட்டிகள் மற்றும் 2 தரைமட்ட நீர் தேக்க தொட்டிகள் ஆகியவற்றில் நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால் பணியாட்களை Outsourcing முறையில் மூன்றாண்டுகளுக்கு பணியமர்த்திட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.G.O.(Ms).No.112, Dated.17.08.2022ன் படி ஒப்பந்த அடிப்படையில் பணியாட்களை அமர்த்திக் கொள்ள அனுமதி அளித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.<br>அதன்படி ஒப்பந்தப்புள்ளி கோரி கீழ்கண்ட இடங்களில் 21 பணியாட்களை பணியமர்த்த வேண்டியுள்ளது.<br>
<table>
<tr><td>1.</td><td>1). வெங்கடேசா காலனி OHT<br>2).Shumps – 2 Nos</td><td>–</td><td>3 நபர்கள்</td></tr>
<tr><td>2.</td><td>மகாலிங்கபுரம் OHT (2 Nos)</td><td>–</td><td>3 நபர்கள்</td></tr>
<tr><td>3.</td><td>சுதர்சன் நகர் OHT</td><td>–</td><td>3 நபர்கள்</td></tr>
<tr><td>4.</td><td>கே.ஆர்,ஜி,பி நகர் OHT</td><td>–</td><td>3 நபர்கள்</td></tr>
<tr><td>5.</td><td>VKV லே அவுட் OHT</td><td>–</td><td>2 நபர்கள்</td></tr>
<tr><td>6.</td><td>KC பார்க் OHT</td><td>–</td><td>3 நபர்கள்</td></tr>
<tr><td>7.</td><td>சோமசுந்தரம் லே அவுட் OHT</td><td>–</td><td>2 நபர்கள்</td></tr>
<tr><td>8.</td><td>ஜோதி நகர் OHT</td><td>–</td><td>2 நபர்கள்</td></tr>
<tr><td></td><td>மொத்தம்</td><td></td><td>21 நபர்கள்</td></tr>
</table>
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023 விதி எண் 235(1) மற்றும் (2) அட்டவணை–I</td><td>தீர்மானம் எண்.1275<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | (30)ன்படி குடிநீர் விநியோகம் பொதுமக்களுக்கு தங்குதடையின்றி விநியோகிக்க ஏதுவாக, வருகின்ற டிசம்பர் மாதம் 2024 முதல் ஒரு வருடத்திற்கு பணியார்களை அமர்த்திக்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவின மதிப்பீட்டுத் தொகை ரூ.58.80 இலட்சத்திற்கு குடிநீர் வழங்கல் நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினத் தொகையை நகராட்சி குடிநீர் வழங்கல் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: 2012/2022/இ1 | |
| 8 | பொள்ளாச்சி நகர பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் தடையின்றி விநியோகம் செய்ய ஏதுவாக அம்பராம்பாளையம் தலைமை நீரேற்று நிலையம், சுத்திகரிப்பு நிலையம் மற்றும் மார்க்கெட்ரோடு நீர் உந்து நிலையம் ஆகியவற்றில் நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால் பணியாட்களை **Outsourcing** முறையில் மூன்றாண்டுகளுக்கு பணியமர்த்திட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண். G.O.(Ms).No.112, Dated.17.08.2022ன் படி ஒப்பந்த அடிப்படையில் பணியாட்களை அமர்த்திக் கொள்ள அனுமதி அளித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.<br>அதன்படி ஒப்பந்தப்புள்ளி கோரி கீழ்கண்ட இடங்களில் 15 பணியாட்களை பணியமர்த்த வேண்டியுள்ளது.<br>1. அம்பராம்பாளையம் தலைமை நீரேற்று நிலையம் மற்றும் மார்க்கெட்ரோடு நீர் உந்து நிலையம். (மின் பணியாளர்கள் தரம் –II ) – **8** நபர்கள்<br>2. அம்பராம்பாளையம் தலைமை நீரேற்று நிலையம் மற்றும் மார்க்கெட்ரோடு நீர் உந்து நிலையம். (உதவியாளர்கள்) – **7** நபர்கள்<br>தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023 விதி எண் 235(1) மற்றும் (2) அட்டவணை–I (30)ன்படி குடிநீர் விநியோகம் பொதுமக்களுக்கு தங்குதடையின்றி விநியோகிக்க ஏதுவாக, வருகின்ற டிசம்பர் மாதம் 2024 முதல் ஒரு வருடத்திற்கு பணியார்களை அமர்த்திக்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவின மதிப்பீட்டுத் தொகை ரூ.47.40 இலட்சம் குடிநீர் வழங்கல் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினத் தொகையை நகராட்சி குடிநீர் வழங்கல் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: 2012/2022/இ1 | **தீர்மானம் எண்.1276 அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr><td>9</td><td>பொள்ளாச்சி நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.02ல் டாக்டர் அம்பேத்கார் வீதியில் குடிநீர் பகிர்மான குழாய் அமைத்தல் பணிக்கு ரூ.0.75 இலட்சம் மதிப்பீட்டிற்கு 06.03.2024 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு.<br><br>
<table>
<tr><td>1.</td><td>திரு.U.ஆரீஃப்கான், பொள்ளாச்சி.</td><td>மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.20% குறைவு.</td></tr>
<tr><td>2.</td><td>திரு.G.இளையராஜா, சேலம்</td><td>மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 2.96% அதிகம்.</td></tr>
</table>
<br>வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு.U.ஆரீஃப்கான், பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு :</u><br>
1. மேற்படி பணிக்கு நகரமன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டுள்ளது.<br>
2. மேற்காண் பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.20% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு.U.ஆரீஃப்கான், பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br>
3. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண்:1615/2024/இ1</td><td>தீர்மானம் எண்.1277<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>10</td><td>திரு.பெ.ராஜமாணிக்கம், குழாய் திறப்பாளர் ராசிபுரம் நகராட்சி (பணி ஓய்வு) என்பவரால், மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு W.P.No.30990/2024ல், பொள்ளாச்சி நகராட்சி ஆணையாளரை மூன்றாம் பிரதிவாதியாக சேர்த்து வழக்கு தொடரப்பட்டுள்ளது.<br>
மேற்காண், வழக்கினை உயர்நீதிமன்ற சிறப்பு அரசு வழக்குரைஞர் திரு.டி.சீனிவாசன், அவர்கள் மூலம் நடத்திட நடவடிக்கை மேற்கொண்டதற்கும், வழக்காடுவதற்கான கட்டணம் மற்றும் இதர உத்தேச செலவினங்களை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு :</u><br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கைகள் மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>
ந.க.எண்: 11031/1999/இ1</td><td>தீர்மானம் எண்.1278<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 11 | பொள்ளாச்சி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14, அபிராமி ஆண்டாள் லே அவுட் பகுதிக்கு பொதுமக்களின் குடிநீர் அல்லாத பிற தேவைகளை பூர்த்தி செய்வதற்கு குமரன் நகர் கிணற்றிலிருந்து பகிர்மான குழாய் அமைத்து பொதுமக்களுக்கு தண்ணீர் வழங்குவதற்கு ரூ.2.20 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை குடிநீர் வழங்கல் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்:6470/2024/இ1 | **தீர்மானம் எண்.1279 அனுமதிக்கப்பட்டது** |
| 12 | பொள்ளாச்சி நகராட்சி பகுதிகளில் பல்வேறு திட்டப்பணிகளான சாலைப்பணிகள், குடிநீர் பணிகள், பாதாள சாக்கடை பணிகளில் வீடுகளுக்கு இணைப்பு வழங்கும் பணிகள் மற்றும் பொதுமக்களுக்கு தேவையான பல்வேறு அடிப்படை வசதிப் பணிகள் நடைபெற்று வருவதால், அவற்றை கண்காணிக்க Outsourcing முறையில் மூன்றாண்டுகளுக்கு பணியமர்த்திட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.G.O.(Ms).No.112, Dated.17.08.2022ன் படி ஒப்பந்த அடிப்படையில் பணியாட்களை அமர்த்திக் கொள்ள அனுமதி அளித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.<br>அதன்படி ஒப்பந்தப்புள்ளி கோரி கீழ்கண்ட இடங்களில் 4 பணியாட்களை பணியமர்த்த வேண்டியுள்ளது.<br>1. தொழில்நுட்ப உதவியாளர் கிரேடு–I–ல் 1 நபர்.<br>2. தொழில்நுட்ப உதவியாளர் கிரேடு–II–ல் 2 நபர்.<br>3. தொழில் நுட்ப உதவியாளர் கிரேடு–III–ல் 1 நபர்.<br>தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023 விதி எண் 235(1) மற்றும் (2) அட்டவணை–I (30)ன்படி குடிநீர் விநியோகம் பொதுமக்களுக்கு தங்குதடையின்றி விநியோகிக்க ஏதுவாக, வருகின்ற டிசம்பர் மாதம் 2024 முதல் ஒரு வருடத்திற்கு பணியாளர்களை அமர்த்திக்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவின மதிப்பீட்டுத் தொகை ரூ.47.40 இலட்சம் குடிநீர் வழங்கல் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினத் தொகையை நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.2072/2022/இ1** | **தீர்மானம் எண்.1280 அனுமதிக்கப்பட்டது** |
| 13 | பொள்ளாச்சி நகராட்சி பொது நிதியின் கீழ் வார்டு எண்.28 கண்ணப்பன் நகரில் வடிகால் அமைத்தல் பணிக்கு ரூ.0.65 இலட்சம் மதிப்பீட்டிற்கு 18.09.2024 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு. | **தீர்மானம் எண்.1281 அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>1.</td><td>M/s.ஸ்ரீ குமரன் கன்ஸ்ட்ரக்சன்ஸ், பொள்ளாச்சி.</td><td>மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.11% குறைவு.</td></tr>
<tr><td>2.</td><td>M/s.சிவசக்தி அன் கோ, பொள்ளாச்சி.</td><td>மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 2.99% அதிகம்.</td></tr>
</table>
வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/s.ஸ்ரீ குமரன் கன்ஸ்ட்ரக்சன்ஸ், பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு :</u><br>
1. மேற்படி பணிக்கு நகர்மன்ற தீர்மான எண்.673, நாள்.31.07.2023–ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.<br>
2. மேற்காண் பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.11% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/s.ஸ்ரீ குமரன் கன்ஸ்ட்ரக்சன்ஸ், பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br>
ந.க.எண்: 6041/2023/இ1
</td>
<td></td>
</tr>
<tr>
<td>14</td>
<td>
நகராட்சிக்குட்பட்ட சி.டி.சி மேடு பகுதியில் புதிய புறநகர் பேருந்து நிலையம் அமைத்தல் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.700.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.<br>
வழங்கப்பட்ட நிர்வாக அனுமதிக்கேற்ப தொழில்நுட்ப அங்கீகாரம் பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரிய திருவாளர்கள்.ஸ்ரீ சாயி அசோசியேட்ஸ், திருப்பூர் என்கிற ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டது.<br>
பணி உத்திரவிற்கேற்ப ஒப்பந்ததாரரும் பணியை மேற்கொண்டு வருகிறார். பணியில் 64 கடைகள் மற்றும் நடைபாதை ஆகியவற்றிற்கு மேற்கூரை அமைக்கும் பணி முடிக்கப்பட்டு, பூச்சு வேலை நடைபெற்று வருகிறது. கடைகள் மற்றும் நடைபாதைகளுக்கு தரைகற்கள் (Rajasthan Kota Floor Tiles) பதிக்க வேண்டிய அளவு 1880.00 சதுர மீட்டர் ஆகும். ஆனால் மூல மதிப்பீட்டில் 523.00 சதுர மீட்டர் மட்டுமே தரைகற்கள் பதிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மீதம் 1357.00 சதுர மீட்டருக்கு அமைக்க வேண்டியுள்ளது.<br>
கட்டப்படும் பேருந்து நிலையத்தினை குறித்த காலத்தில் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு ஏதுவாக மேற்காணும் பணிகளை மேற்கொள்ளுவது அவசியமாகிறது.<br>
மூல மதிப்பீட்டில் ஒருசில இனங்களில் உள்ள அளவுகளில் கூடுதல் அளவுகள் மேற்கொள்ளவும் மற்றும் மூல மதிப்பீட்டில் இல்லாத ஒருசில இனங்களுக்கு Supplemental data உடன் சேர்த்து ரூ.7,69,85,575/–க்கு வேலை மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.<br>
எனவே, வேலை மதிப்பீட்டுத் (Work slip) தொகையில், அனுமதிக்கப்பட்ட நிர்வாக அனுமதித் தொகை ரூ.700.00 இலட்சம் போக, மீதமுள்ள தொகையான ரூ.69,85,575/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
</td>
<td>தீர்மானம் எண்.1282<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலக குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. கூடுதலான தொகையை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3. தயார் செய்யப்பட்ட வேலை மதிப்பீட்டிற்கும் (Work Slip) மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்: **4359/2022/இ1** | |
| **15** | நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.31, மரப்பேட்டையிலிருந்து கண்ணப்பன் நகர் வரை சுமார் 5.00 கிலோ மீட்டர் நீளத்திற்கு மரப்பேட்டை ஓடை (பள்ளம்) செல்கிறது. மழைகாலங்களில் பெய்யும் மழைநீர் இப்பள்ளத்தின் வழியே அதிகப்படியாக செல்லும், அவ்வாறு வழிந்தோடும் மழைநீரால் அடித்து வரப்படும் மரங்கள், பிளாஸ்டிக் கழிவுகள் மற்றும் இதரபொருட்கள், போக்குவரத்துக்கு ஏதுவாக பள்ளத்தில் அமைக்கப்பட்ட பாலங்களில் இருப்பு சேருவதால் மழைநீர் தேங்கி அருகிருள்ள குடியிருப்பு பகுதிகளுக்குள் செல்கிறது. இதனால் பொதுமக்கள் பெரிதும் சிரமத்துக்குள்ளாகிறார்கள். பொதுமக்கள் நலன் கருதி கம்பிவலை அமைக்க ரூ.9.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்: **6512/2024/இ1** | **தீர்மானம் எண்.1283 அனுமதிக்கப்பட்டது** |
| **16** | நகராட்சி எல்லைக்குட்பட்ட மரப்பேட்டையிலிருந்து கண்ணப்பன் நகர் வரை மரப்பேட்டை ஓடை (பள்ளம்) செல்கிறது. இப்பள்ளமானது வார்டுகள் முறையே 24, 25, 28, 29, 31 மற்றும் 33 ஆகிய வார்டுகளில் வழியே சுமார் 5 கிலோ மீட்டர் நீளத்தில் செல்கிறது. இப்பள்ளத்தின் வழியே செல்லும் கழிவு நீர் அதிகப்படியாக செல்வதால் மண் படிவுகள் ஏற்படுகிறது. கழிவுகள் தேங்குவதால் பள்ளத்தின் பக்கச் சுவர்கள் அரிப்பு ஏற்படுவதோடு ஓடையின் உயரம் குறைந்து காணப்படுகிறது. இதனால் மழைக்காலங்களில் செல்லும் நீரானது ஓடையின் உயரம் குறைவின் காரணமாக, இருபுறம் கரைகளில் வசிக்கும் பொதுமக்கள் வீட்டிற்கு செல்ல தடை ஏற்படும் வாய்ப்பு உருவாகும் சூழ்நிலை ஏற்படுகிறது.<br>மேலும் சுகாதாரப் பிரச்சனை ஏற்படுவதால் பொதுமக்கள் மற்றும் குழந்தைகள் பெரிதும் சிரமத்திற்குள்ளாகிறார்கள்.<br>பொதுமக்கள் நலன் கருதி, வெள்ளம் ஏற்படும் சூழ்நிலையில் அபாயத்தை தவிர்க்க மேற்காணும் பள்ளத்தினை தூர்வாரி அப்புறப்படுத்த வேண்டியுள்ளது.<br>மேற்காணும் பணியை மேற்கொள்வதற்கு ரூ.8.10 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீடுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | **தீர்மானம் எண்.1284 அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலகக்குறிப்பு:</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: **6513/2024/இ1** | |
| **17** | நகராட்சி எல்லைக்குட்பட்ட K.C பூங்கா பகுதி பின்புறம் தூய்மை பாரத இயக்கம் 2022-23ல் நிதியாண்டில் சமுதாய கழிப்பிடம் கட்டப்பட்டுள்ளது. இக்கழிப்பிடத்தை பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு ஏதுவாக, குடிநீர் வசதி, மின்சார வசதி மற்றும் வர்ணம் பூசுதல் ஆகிய பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இப்பணிகளை மேற்கொள்ள ரூ.4.90 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்: **6514/2024/இ1** | **தீர்மானம் எண்.1285 அனுமதிக்கப்பட்டது** |
| **18** | நகராட்சிக்கு சொந்தமதான குடிநீர் தேக்கத் தொட்டிகள் வளாகம் வெங்கடேசா காலனியில் அமைந்துள்ளன. இவ்வளாகத்தில் 9.00 இலட்சம் கொள்ளளவு கொண்ட தரைமட்டத் தொட்டி மற்றும் 13.00 இலட்சம் கொள்ளளவு கொண்ட தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகள் உள்ளன. இத்தொட்டிகள் பல ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டதாகும். பல ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டதால், மராமத்துப்பணி மேற்கொண்டு புதியதாக வர்ணம் பூசுதல் பணி மேற்கொள்ளுவதற்கு ரூ.3.60 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்:**6511/2024/இ1** | **தீர்மானம் எண்.1286 அனுமதிக்கப்பட்டது** |
| **19** | நகராட்சிக்கு சொந்தமாக சுப்பம்மாள் வீதியில் உள்ள நகராட்சி ஆணையாளர் குடியிருப்பினை மராமத்து செய்து பராமரிக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.4.90 இலட்சத்திற்கு நகரமன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>1. இப்பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.4,90,000/-க்கு நகரமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>2. இப்பணியினை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்: **6420/2024/இ1** | **தீர்மானம் எண்.1287 அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| 20 | நகராட்சிக்கு சொந்தமாக சுப்பம்மாள் வீதியில் உள்ள நகர்நல அலுவலர் குடியிருப்பினை மராமத்து பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.4.40 இலட்சத்திற்கு நகரமன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>1. இப்பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.4.40 இலட்சத்திற்கு நகரமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>2. இப்பணியினை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்: **6418/2024/இ1** | **தீர்மானம் எண்.1288 அனுமதிக்கப்பட்டது** |
| 21 | நகராட்சிக்கு சொந்தமாக சுப்பம்மாள் சாலையில் உள்ள நகராட்சி பொறியாளர் குடியிருப்பினை மராமத்து பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.3.90 இலட்சத்திற்கு நகரமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>1. இப்பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.3.90 இலட்சத்திற்கு நகரமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>2. இப்பணியினை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்: **6419/2024/இ1** | **தீர்மானம் எண்.1289 அனுமதிக்கப்பட்டது** |
| 22 | நகராட்சிக்கு 15–வது நிதிக்குழு மானியம் 2023–24 (Untied Grant) நிதியின் கீழ், தார்சாலை (4 சிப்பம்) அமைக்கும் பணிக்குண்டான, மூன்றாம் தர ஆய்வுச் சான்று, பெறும் பொருட்டு கல்லூரி முதல்வர், கோவை தொழில்நுட்ப கல்லூரிக்கு கடித நகல் அனுப்பப்பட்டது. இதன் அடிப்படையில் மூன்றாம் தர ஆய்வு மேற்கொண்டு சான்று வழங்குவதற்கு ரூ.2,70,000/– செலவினம் ஆகும் என கோவை தொழில்நுட்ப கல்லூரியிலிருந்து பட்டியல் தொகை வரப்பெற்றுள்ளது.<br>மேற்காணும் செலவினத் தொகைக்கு, மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்காணும் உத்தேச செலவினத் தொகையை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: **2680/2022/இ1** | **தீர்மானம் எண்.1290 அனுமதிக்கப்பட்டது** |
| 23 | திருப்பூர் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் அலவலகத்தில் பயன்பாட்டிலுள்ள 12 எண்ணிக்கை கணினிகள் மற்றும் கணினி சார்ந்த உபகரணங்களின் ஆண்டு பராமரிப்பு பணியினை பொள்ளாச்சி நகராட்சியின் மூலம் மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதன்படி மேற்காணும் பணியை மேற்கொள்ள ரூ.1.20 இலட்சம் உத்தேச செலவினத் தொகை ஆகும். உத்தேச செலவினத் தொகைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | **தீர்மானம் எண்.1291 அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலக குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்: **3324/2023/இ2** | |
| **24** | பொள்ளாச்சி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.09 சுப்பையன் நகரில் நகராட்சிக்குச் சொந்தமாக பூங்காவிற்காக ஒதுக்கப்பட்ட பகுதி, இப்பூங்கா வளாகத்தில் திறந்தவெளி கிணறு உள்ளது. இக்கிணற்றை பாதுகாக்கும் வகையில் பல வருடங்களுக்கு முன்னர் பாதுகாப்புச் சுவர் அமைக்கப்ட்டது. பல வருடங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்ட பாதுகாப்புச் சுவர் அதிகமான நீர் இருப்பின் காரணமாக பக்கச்சுவர்கள் பெயர்ந்தும், கீழே விழும் நிலையில் காணப்படுகிறது. பொதுமக்கள் மற்றும் குழந்தைகள் நலன் கருதி பழுதடைந்த பாதுகாப்பு சுவற்றினை அகற்றிவிட்டு புதியதாக பாதுகாப்புச்சுவர் மற்றும் குப்பைகள் கிணற்றில் விழாமல் இருக்க மேற்பரப்பில் இரும்பு கம்பி வலையும் அமைக்க வேண்டியுள்ளது. மேற்காணும் பணிகளை மேற்கொள்ள ரூ.7.90 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை குடிநீர் வழங்கல் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்: **5702/2024/இ1** | **தீர்மானம் எண்.1292**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| **25** | பொள்ளாச்சி நகராட்சிக்குட்பட்ட 36 வார்டுகளில் உள்ள வீதிகளில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகள் மேற்கொள்ளவும், கொசுப்புழு உருவாவதை அழித்திடவும் 300 குடியிருப்புகளுக்கு ஒரு பணியாளர் வீதம் 86 DBC பணியாளர்களை கோவை மாவட்ட ஆட்சியர் அவர்கள் 2021–2022–ல் நிர்ணயித்துள்ள தினக்கூலி மூலம் வெளிக்கொணர்வு அடிப்படையில் (Out Sourcing) திருவாளர் Fusion Man power Infra Services, Trichi நிறுவனம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் 01.12.2023 முதல் 31.05.2024 வரை பணிகள் மேற்கொள்ள உத்திரவிடப்பட்டு 86 DBC பணியாளர்களை கொண்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது.<br>பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தீர்மானம் எண்.1147 நாள்.30.08.2024–ன்படி ஜீன்–2024 முதல் ஆகஸ்ட்–2024 வரையும், நகர்மன்ற தீர்மானம் எண்.1154 நாள்.30.08.2024–ன்படி செப்டம்பர், அக்டோபர் மற்றும் நவம்பர்–2024 ஆகிய மூன்று மாதத்திற்கும் ஒப்பந்தம் நீட்டிப்பு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.<br>எனவே, கோவை மாவட்ட ஆட்சியர் அவர்கள் 2021–2022–ல் நிர்ணயித்துள்ள தினக்கூலி அடிப்படையில் ஏற்கனவே வெளிக்கொணர்வு அடிப்படையில் (Out Sourcing) பணிகள் மேற்கொள்ளும் திருவாளர் Fusion Man power Infra Services, Trichy நிறுவனத்துடனான | **தீர்மானம் எண்.1293**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| | ஒப்பந்தத்தை டிசம்பர்–2024 முதல் பிப்ரவரி–2025 வரை மேலும் மூன்று மாதங்களுக்கு மட்டும் நீட்டிக்கவும், 86 DBC பணியாளர்களை கொண்டு பணிகள் மேற்கொள்வதற்கும், உத்தேச செலவினத் தொகை ரூ.35,00,000/– பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :**<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>**[கோப்பு எண்.1839/2023/எச்2]** | |
| 26 | பொள்ளாச்சி நகராட்சியில் வார்டு 1 முதல் 36 வரையிலான வார்டுகளுக்கு தனியார் மூலம் வெளிக்கொணர்வு அடிப்படையில் 267 தூய்மை பணியாளர்களை கொண்டு தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. அரசாணை எண்.116 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.24.08.2022 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறையில் பொள்ளாச்சி நகராட்சியில் 36 வார்டுகளிலும் தூய்மை பணிகள் மேற்கொள்வதற்கு 116 தூய்மை பணியாளர்கள், 7 துப்புரவுப்பணி மேற்பார்வையாளர்கள் மற்றும் 21 ஓட்டுநர்கள் ஆகிய பணியாளர்களை கொண்டு தனியார் மூலம் வெளிக்கொணர்வு ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் அப்போலோ மேன்பவர் சர்வீஸ் நிறுவனம் மூலம் 01.06.2023 முதல் தூய்மை பணிகள் மேற்கொள்ள உத்திரவிடப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.<br>நுண்ணுயிர் உரமாக்கும் மையம், OCC மையம், உயிரி எரிவாயு மையம், வளமீட்பு மையம், உரக்கிடங்கு மற்றும் நகராட்சிக்கு சொந்தமான வளர்ச்சிப்பணிகள் மேற்கொள்ளப்பட்ட பூங்காக்களுக்கு தூய்மை பணிகள் மேற்கொள்வதற்கு தூய்மை பணியாளர்கள் நியமிக்கப்படாததால் பொது சுகாதார பணிகள் பாதிக்கப்படும் சூழல் உள்ளதால் இப்பணிகளை தனியார் மூலம் வெளிகொணர்வு அடிப்படையில் 54 பணியாளர்களை கொண்டு பணிகள் மேற்கொள்வதற்கு அனுமதி வழங்க கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.<br>நகர்மன்ற தீர்மானம் எண்.660 நாள்.31.07.2023–ல் மேற்காண் பொது சுகாதார பணிகளுக்கு 45 எண்ணிக்கையிலான தூய்மை பணியாளர்களை கொண்டு ஜீன் 2023 முதல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பின்னர் நவம்பர்–2024 வரை நகர்மன்றத்தின் அனுமதி பெற்று ஒப்பந்தம் நீட்டிப்பு செய்யப்பட்டு தனியார் மூலம் வெளிக்கொணர்வு அடிப்படையில் அப்போலோ மேன்பவர் சர்வீஸ் நிறுவனம் மூலம் தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.<br>நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்ட கருத்துரு மீது ஆணைகள் எதிர்நோக்கியுள்ளதால், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள ஊதிய விகிதத்தின் அடிப்படையில் பிரதி மாதத்திற்கான உத்தேச செலவினம் ரூ.8,00,000/– வீதம் தற்காலிகமாக டிசம்பர்–2024 முதல் பிப்ரவரி–2025 வரை மேலும் மூன்று மாதங்களுக்கு மட்டும் அப்போலோ மேன்பவர் சர்வீஸ் நிறுவனம் மூலம் தூய்மை பணிகள் மேற்கொள்ள ஒப்பந்த காலத்தை நீட்டிக்கவும், அதற்கான செலவினத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | **தீர்மானம் எண்.1294**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலகக்குறிப்பு</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.7417/2022/எச்1** | |
| 27 | பொள்ளாச்சி நகராட்சியில் 2024–25ம் ஆண்டிற்கு பொறியியல் பிரிவில் நடைபெறும் வளர்ச்சிப்பணிகள் மற்றும் இதர பணிகள் தொடர்பாக தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்ய ஆகும் கட்டணத்திற்கு உத்தேச செலவினம் ரூ.7.00 இலட்சத்திற்கு மன்றம் முன் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். **3566/2023/இ1** | **தீர்மானம் எண்.1295 அனுமதிக்கப்பட்டது** |
| 28 | பொள்ளாச்சி நகராட்சிக்கு சொந்தமான அண்ணா மத்திய பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பிடம் குத்தகைக்கு விடப்பட்டு 3 ஆண்டு குத்தகை காலம் 30.11.2024 உடன் முடிவடைவதால், இக்கட்டண கழிப்பிடத்தினை குத்தகைக்கு விடுவதற்கு ஏதுவாக ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரவும், ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினசரி செய்தித்தாளில் வெளியிடவும், அதற்கான அனைத்து செலவினங்களை பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>**ந.க.எண்.5035/2020/அ6** | **தீர்மானம் எண்.1296 அனுமதிக்கப்பட்டது** |
| 29 | பொள்ளாச்சி நகராட்சிக்குட்பட்ட மேல்நிலைப்பள்ளி–4, நடுநிலைப்பள்ளி–8 மற்றும் தொடக்கப்பள்ளி–5 மொத்தம் 17 அரசு பள்ளிகளில் 20 தூய்மை பணியாளர்கள் மற்றும் 12 பெருக்குநர்களை கொண்டு கோவை மாவட்ட ஆட்சியர் அவர்கள் 2021–2022–ல் நிர்ணயித்துள்ள தினக்கூலி அடிப்படையில் வெளிக்கொணர்வு மூலம் (Out Sourcing) திருவாளர் Fusion Man power Infra Services, Trichi நிறுவனம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் நகர் மன்ற தீர்மானம் எண் 650, நாள்.31.07.2023ன் படி 01.12.2023 முதல் 31.11.2024 வரை ஓராண்டு காலத்திற்கு பணிகள் மேற்கொள்ள 30.11.2023 அன்று பணி உத்திரவு வழங்கி 32 பணியாளர்களை கொண்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது.<br>பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி கோவை மாவட்ட ஆட்சியர் அவர்கள் 2021–2022–ல் நிர்ணயித்துள்ள தினக்கூலி அடிப்படையில் ஏற்கனவே வெளிக்கொணர்வு அடிப்படையில் (Out Sourcing) பணிகள் மேற்கொள்ளும் திருவாளர் Fusion Man power Infra Services, Trichi நிறுவனத்துடனான ஒப்பந்தத்தை டிசம்பர்–2024 முதல் பிப்ரவரி–2025 வரை மேலும் மூன்று மாதங்களுக்கு மட்டும் நீட்டிக்கவும், 20 தூய்மை பணியாளர்கள் மற்றும் 12 பெருக்குநர்களை கொண்டு பணிகள் மேற்கொள்வதற்கும், உத்தேச செலவினத் தொகை ரூ.15,00,000/– பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | **தீர்மானம் எண்.1297 அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| | **அலுவலகக் குறிப்பு :**<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>**(கோப்பு எண்.1928/2023/எச்2)** | |
| 30 | பொள்ளாச்சி நகராட்சியில் பராமரிக்கப்படும் அம்மா உணவகத்தில் பணிபுரியும் நந்தவனம் மகளிர் மற்றும் சிக்கன நாணய சங்கப் பணியாளர்களுக்கு பொள்ளாச்சி நகராட்சியில் EPF–ன் நிர்வாக பங்குத் தொகை டிசம்பர் 2020 முதல் ஏப்ரல் 2022 வரை ரூ.2,47,647/–யை செலுத்தக் கோரி தொழிலாளர் வருங்கால வைப்புநிதி துறையிடம் இருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது. இத்தொகை ரூ.2,47,647/–யை தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி துறைக்கு செலுத்தும் பொருட்டு நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.<br>**அலுவலகக் குறிப்பு :**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்.04121/2024/பி1** | **தீர்மானம் எண்.1298**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 31 | பொள்ளாச்சி நகராட்சியில் பல்வேறு பகுதிகளில் நகராட்சிக்கு சொந்தமான நிலங்கள் தற்போது பயன்படுத்தப்படாமல் சுகாதாரமற்ற முறையிலும், கட்டிடங்கள் சிதிலடைந்து உள்ளது. கட்டிடங்களில் இரவு நேரங்களில் சமூக விரோதிகள் மற்றும் அன்னியர்கள் பயன்படுத்தி வருவதாக பொதுமக்களும், சமூக ஆர்வலர்களும் தொடர்ந்து தெரிவித்து வருகின்றனர். அதேபோன்று காலியாக இருக்கும் இடங்களில் வாகன ஓட்டிகள், சாலையோர வியாபாரிகள் மற்றும் அக்கம்பக்கத்தில் உள்ளோர் ஆக்கிரமிப்பு செய்து பயன்படுத்தி வருகின்றனர். இதனால் நகராட்சிக்கு சொந்தமான சொத்துக்களுக்கு இடையூறு ஏற்பட வாய்ப்புள்ளது.<br>எனவே, நகராட்சிக்கு சொந்தமான காலியாக உள்ள பயன்பாடற்ற இடங்களை சுத்தம் செய்து, வேலி அமைத்து பாதுகாப்பதுடன், அன்னியர்களின் ஆக்கிரமிப்பு ஏற்படாத வகையிலும், சமூக விரோதிகளின் அடைக்கலத்தை தவிர்க்கவும், நகராட்சிக்கு வருவாய் ஈட்டும் விதமாகவும், குத்தகைக்கு விடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள தெரிவித்து பொதுமக்கள், நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் நகர்மன்ற தலைவர் ஆகியோர் கோரிக்கையின்படி, நகராட்சிக்கு சொந்தமான பயன்பாடற்ற நிலங்களுக்கு வழிகாட்டு மதிப்பீட்டின் அடிப்படையிலும், சந்தை மதிப்பீட்டின் அடிப்படையிலும் வாடகை நிர்ணயம் செய்து குத்தகை அடிப்படையில் பொது ஏலம் விடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>**ந.க.எண். 5035/2020/அ6** | **தீர்மானம் எண்.1299**<br>**1. அனுமதிக்கப்பட்டது**<br>**2. வார்டு எண் 1,8 மற்றும் 19 ஆகிய நகரமன்ற உறுப்பினர்களால் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.** |
| 32 | பொள்ளாச்சி நகராட்சி வார்டு எண்.11 கதவு எண் 12/1, காமராஜர் வீதி பகுதியில் உள்ள சொத்துவரி வரிவிதிப்பு எண் 076/011/901078 திரு.அ.முத்துசாமி என்ற பெயரில் வணிகப்பயன்பாட்டிற்கான சொத்துவரி விதிக்கப்பட்டு தற்போது இவ்வணிக பயன்பாட்டு கட்டிடம் வாகனம் நிறுத்தும் இடமாக மாற்றம் செய்யப்பட்டுள்ளதால், இக்கட்டிடத்தின் சொத்துவரியை நீக்கம் செய்துதரக்கோரி திரு.அ.முத்துசாமி என்பவரால் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | **தீர்மானம் எண்.1300**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| | மேற்காண் கட்டிடம் நேராய்வு செய்யப்பட்டதில் கட்டிடத்தின் அடி தளத்தில் வணிக பயன்பாட்டின் கட்டிடமாக சொத்துவரி வரிவிதிப்பு செய்யப்பட்டு இருப்பதை மாற்றி இக்கட்டிடத்தின் வாகன நிறுத்துமிடமாக மாற்றம் செய்யப்பட்டுள்ளதால் இதன் சொத்துவரி விதிப்பு எண் 076/011/901078–ஐ 01.04.2024 முதல் ரத்து செய்து அதற்கான கேட்பினை நீக்கம் செய்திட மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>**ந.க.எண்.6613/2024/அ1** | |
| 33 | பொள்ளாச்சி நகராட்சி வரியில்லா இனங்களில் குத்தகைக்கு விடப்பட்டுள்ள இனங்களுக்கு சரக்கு மற்றும் சேவை வரி செலுத்துவது குறித்து சரக்கு மற்றும் சேவை வரித்துறை அலுவலகம் மூலம் காரணம் அறிவிப்பு வழங்கப்பட்டதை எதிர்த்து நகராட்சியின் மூலம் ஆணையர் மற்றும் இணை ஆணையர் சரக்கு மற்றும் சேவை வரித்துறை அலுவலகம் மீது சென்னை உயர்நீதி மன்றத்தில் WP எண்.16556/2022–ல் வழக்கு தொடரப்பட்டு வழக்கானது நகராட்சிக்கு சாதகமாக தீர்ப்புரை வழங்கப்பட்டு, வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதால் சரக்கு மற்றும் சேவை வரித்துறை மூலம் வரப்பெற்ற நீதிமன்ற உத்திரவின்மீது மேல்முறையீடு செய்வதை தவிர்க்கும் பொருட்டு கேவிட்(Caveat) மனுதாக்கல் செய்திடவும், அதற்கான வழக்கு கட்டணம் தொகை ரூ.10000/– வழங்கிட நகராட்சி வழக்கறிஞர் திரு.B.ஆனந்த் அவர்களின் 25.11.2024–ம் நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>மேற்காண் வழக்கின்மீது கேவிட்(Caveat) மனுதாக்கல் செய்திடவும், வழக்கு கட்டணத்தொகை ரூ.10000/– நகராட்சி வழக்கறிஞர் திரு.B.ஆனந்த் அவர்களுக்கு வழங்கிடவும், அதற்கான செலவினத்தினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>**ந.க.எண். 672/2020/அ1** | **தீர்மானம் எண்.1301 அனுமதிக்கப்பட்டது** |
| 34 | நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.31 மரப்பேட்டை கிழக்கு பகுதி வழியே மழைக்காலங்களில் பெய்யும் மழை நீர் வழிந்தோட மரப்பேட்டை பள்ளம் அமைந்துள்ளது. இப்பள்ளத்தின் இருபுறமும் பொதுமக்கள் வசிக்கும் குடியிருப்புகள் அமைந்துள்ளன. பள்ளத்தின் இருபுறமும் வசிக்கும் பொதுமக்கள் ஒருகரையில் இருந்து மறுக்கரைக்கு செல்வதற்கு, பள்ளத்தின் இடையில் இணைப்பு பாலம் இல்லாததால், பள்ளத்தினை கடக்க முடியாமல் பொதுமக்கள் பெரிதும் சிரமத்திற்குள்ளகிறர்கள். எனவே, பொதுமக்கள் நலன் கருதி பள்ளத்தினை கடக்க இணைப்பு இரும்பு பாலம் அமைப்பதற்கு ரூ.6.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | **தீர்மானம் எண்.1302 அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலக குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்காணும் மதிப்பிட்டுத் தொகையினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்: 6366/2024/இ1** | |
| 35 | நகராட்சி எல்லைக்குட்பட்ட உடுமலை சாலையில் அமைந்துள்ள நீதிமன்ற வளாகத்தில் மாண்புமிகு மாவட்ட முதன்மை நீதிபதி அவர்களின் கடித எண்.8169/2024, நாள்.13.09.2024ம் நாளிட்ட கடிதத்தில் நீதிமன்ற வளாகத்திற்கு வரும் பொதுமக்களின் நலன் கருதி நடமாடும் தற்காலிக கழிப்பிடம் அமைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>இதன் அடிப்படையில் நீதின்ற வளாகத்தில் இரண்டு எண்ணிக்கை நடமாடும் தற்காலிக கழிப்பிடம் அமைக்க ரூ.1.40 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்காணும் மதிப்பிட்டுத் தொகையினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்: 5314/2024/இ1** | **தீர்மானம் எண்.1303 அனுமதிக்கப்பட்டது** |

**(ஒப்பம்) திருமதி.ந.சியாமளா**
**நகர்மன்ற தலைவர்**
**பொள்ளாச்சி நகராட்சி**

**//உண்மை நகல்//**

**ஆணையாளர்**
**பொள்ளாச்சி நகராட்சி**